சுதந்திரன்
SUTANTIRAN
தொலை பேசி: 23411 — விலை சதம் 60
வள்ளுவர் ஆண்டு 2005, ஆனி 30உ (14-7 74) ஞாயிறு ஜூலை 14 ஜ: ஆகிர் 23 புத்தகம் 27 இதழ் 46

# பிரதமர் வருகையை எதிர்த்து பகிஷ்கார இயக்கம்!

பிரதமரின் உத்தேச யாழ் விஜயத்தை எதிர்த்து தீவிர பகிஷ்கார இயக்கத்தில் ஈடுபடுவதென தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ளது. இப்பகிஷ்கார இயக்கத்தை தமிழர் கூட்டணி பா. உ. க்கள், ஏனைய தலைவர்கள், கூட்டணி இளைஞர்கள், மாதர் முன்னணியினர் ஆகியோர் முன்னின்று நடத்துவார்கள்—

இம் முடிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இக்கூட்டம் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்றது.

பிரதமரின் உத்தேச யாழ் விஜயத்தை பூரணமாகப் பகிஷ்கரிக்கும்படி தமிழ் மக்களைக் கோரும் பிரசாரத்தை தமிழர் கூட்டணி உடனடியாக ஆரம்பிக்கவிருக்கிறது.

பிரதமரின் யாழ் விஜயத்தை பகிஷ்கரிப்பதற்கான

(5-ம் பக்கம் பார்க்க)

## கோணேசர் கொலுவிருக்கும் கோட்டைக்கு ஆபத்து!

இந்துக்களின் பழம் பெரும் புனிதஸ்தலமும் தேவாரப்பாடல்பெற்ற ஆலயமுமாகிய கோணேசர் கொலுவிருக்கும் திருக்கோவில் அமைந்திருக்கும் 'பிரெடெரிக்' கோட்டைக்கும் ஆபத்து வந்திருக்கிறது.

இக்கோட்டையை தொல்பொருள் ஆய்வுப் பகுதிக்குக் கையளிப்பதற்கு கலாசார அமைச்சு முடிவுசெய்துள்ளதாம்!

கோணேசர் கோவிலையும், அக்கோவில் அமைந்துள்ள 'பிரெடெரிக்' கோட்டையையும், புனித நகராகப் பிரகடனப்படுத்தி, அதை இந்துக்களிடம் கையளிக்கும்படி இந்நாட்டுத் தமிழ் மக்கள் நீண்ட காலமாகக்கோரி வருகையில், மேற்படி கோட்டையை தொல்பொருளாய்வுக்கு விடுவதற்கு கலாசார அமைச்சு எடுத்துள்ள முடிவு இந்துக்களிடையே பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுளது.

- துப்பாக்கிமுனையில்
- தமிழ் விவசாயிகள்
- மிரட்டப்பட்டனர்!

# ஆகாயப்படையினர் அட்டகாசம்!

தமிழ் விவசாயிகள் துப்பாக்கி முனையில் ஆகாயப்படையினரால் மிரட்டப்பட்டனர். இச்சம்பவம் திருகோணமலையயடுத்துள்ள பன்குளத்தில் நடைபெற்றிருக்கிறது. இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

அண்மையில் பன்குளத்திலுள்ள செல்வ வரோதய நகரில் உள்ள தமது சொந்தக் காணிகளிலிருந்து சில தமிழ் விவசாயிகள் விறகு வெட்டி, அவற்றைத் தமது உழவு இயந்திரங்களில் ஏற்றிக்கொண்டு வரும்போது துப்பாக்கி ஏந்திய ஆகாயப்படையினர் சிலர் அவர்களை வழிமறித்தனர். தமிழ் விவசாயிகளின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியை நீட்டியபடி அவர்களை தங்கள் மேலதிகாரியிடம் கொண்டு சென்றனர்.

அந்த மேலதிகாரி, அவ் விவசாயிகளைப் பார்த்து ''டேய், உங்களை யாரடா இந்த தெருவால போகச் சொன்னது? இந்த விறகு யாரடா எடுக்கச் சொன்னது? இது உங்க அப்பன் சொத்தா? இது எங்கட அம்மாட சொத்து! உங்களை யாரடா இதற்குள் வரச் சொன்னது?'' என்று வாயில் வந்தபடி திட்டினாராம். மேலும் கண்டபடி தூஷணை வார்த்தைகளால் ஏசிவிட்டு, ''இனி இங்கு வந்தால் நடப்பது வேறு'' என்று துப்பாக்கியை காட்டி இறுதியாக மிரட்டினாராம் அந்த அதிகாரி.

செல்வவரோதய நகரில் எத்தனையோ பேருக்கு சொந்தக்காணி இருப்பதாகவும் அந்தத் தெருவால் செல்வதற்கு அனுமதி இருப்பதாகவும், அதையெல்லாம் பொருட்படுத்தாது சர்வாதிகார முறையில் தம்மை ஆகாயப்படையினர் மிரட்டியதாகவும் அவ்விவசாயிகள் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளுக்குள் விறகு பொறுக்குவதற்கும், தெருவால் நடப்பதற்கும் கூட இந்நாட்டில் இடமில்லையா? இதுதானா ஐக்கிய முன்னணி அரசின் முற்போக்கு கொள்கை என்று கொதிப்புடன் கேட்கிறார்கள் பாதிப்புக்குள்ளான தமிழ் விவசாயிகள்.

# எழுத்தாளர் பேரவை மீதும் இரகசிய பொலீஸ் மோப்பம்!

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை மீதும் இரகசிய பொலிசார் தங்கள் கவனத்தைத் திருப்பியிருக்கின்றனர். பேரவைத் தலைவர் ஈழவேந்தன், இணைச் செயலாளர் அருள் மா. இராசேந்திரம் ஆகியோர் சென்றவாரம் இரகசிய பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

எழுத்தாளர் பேரவையின் செயற்குழு உறுப்பினர்களின் பெயர் விபரங்களையும் சி. ஐ. டி. பொலிசார் கேட்டுப் பெற்றுள்ளனர். இது சம்பந்தமாக பேரவையின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பின் வருமாறு கூறினார்:—

ஈழத்தின் தமிழ் இலக்கியத்தின் தரத்தை உயரச் செய்யவும் சிதறிக்கிடக்கும் தமிழ் எழுத்தாளர்களை ஒன்றுபடுத்தி, அவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தவும், தமிழ் இலக்கியத்தை வளரச் செய்யவும், உருவாக்கப்பட்டது தமிழ் எழுத்தாளர் பேரவை. இப்பேரவை இப்போதுதான் அரும்பாகி முளைவிட்டு வருகிறது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக நாவல் போட்டியொன்றையும் நடத்த முன்வந்திருக்கிறது.

''அரசாங்கம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் போதிய ஊக்கமும் உதவியும் தராத நிலையில், தமிழ் எழுத்தாளர் பேரவை மூலமாவது ஏதாவது செய்ய முயலுகிறோம். இதுகூட அரசுக்குப் பிடிக்கவில்லைப் போலும்!

''தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் எழுத்தாளர்களின் உயர்ச்சிக்கும் தொண்டாற்ற ஆரம்பித்திருக்கும் எமது பேரவையை முளையிலேயே கிள்ளியெறியும் நோக்குடன் தான் சி.ஐ.டி. பொலிசை அரசு எம்மீது ஏவியிருக்கிறதா?

எது எப்படியாயினும் எவ்வித தொல்லை நேரடினும் எமது எழுத்தாளர் பேரவை தான் ஏற்றுக்கொண்ட பணியிலிருந்து ஒருபோதும் தவறாது.''

## பீலிக்ஸ் கூறுகிறார்!

''யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற நிர்வாகத்தில் பிழை இல்லையென்று நான் சொல்லவில்லை. மேயர் திரு. துரையப்பா என் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக அதை மூடி மறைக்கவும் முடியாது''

—உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா. (வீரகேசரி 9-7-74)

# துரோகப்பரின் வெள்ளிவிழாவை யாழ் மக்கள் பகிஷ்கரித்தனர்!

துரோகப்பர் கும்பல் முன்னின்று நடத்திய யாழ் மாநகர சபையின் வெள்ளிவிழா தமிழ்ப் பொதுமக்கள் பகிஷ்கரித்ததால் பிசுபிசுத்தது. தமிழ் சமுதாயத்துக்கு அள்ளிவைத்து கொள்ளி சொருகுபவர்களின் வெள்ளிவிழாவில் மானமுள்ள எமக்கு என்ன வேலை யென்று தமிழ் மக்கள் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை முற்றுகப் புறக்கணித்து, துரோகக் கும்பலின் முகத்தில் கரிபூசினர்!

பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்த வெள்ளிவிழா பற்றிய சுவரொட்டிகளை பொதுமக்கள் கிழித்தெறிந்துள்ளதை யாழ்நகர வீதிகளின் சுவர்கள் எடுத்துக் காட்டி நின்றன;

மக்கள் பசியாலும் பட்டினியாலும், தவிக்கையில் மாநகரசபைப் பணத்தை கரியாக்குவதேன் என்று வரியிறுப்பாளர்கள் குமுறுகின்றனர்;

உலகத் தமிழ் மாநாட்டுக்கு போட்டியாக வெள்ளிவிழா என்ற போர்வையில் போட்டி விழா நடத்த முற்பட்ட துரோகப்பருக்கு பட்டை நாமம் சாத்தி விட்

(5-ம் பக்கம் பார்க்க)


## சிவகுமாரனுக்கு இந்து வாலிபர்கள் அஞ்சலி!

தன்னைத் தானே தமிழ் சமுதாயத்துக்காக அர்ப்பணித்துக்கொண்ட இந்து இளைஞன் சிவகுமாரனுக்கு சென்ற வார இறுதியில் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை இந்து இளைஞர் மாநாட்டில் அஞ்சலி தெரிவிக்கப்பட்டு மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்து இந்து இளைஞர்கள் கலந்துகொண்ட இலங்கை இந்து இளைஞர் பேரவையின் ஐந்தாவது பேராளர் அவைக்கூட்டத்தில் பின்வரும் முக்கிய தீர்

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




# 21. 'சொல்லாக்கம்' பற்றி எழுந்த சொல்லாடல்!

'புத்தம் புதிய கலைகள்
பஞ்ச பூதச் செயல்களின்
நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே
அந்த மேன்மைக் கலைகள்
தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை-அவை
சொல்லும் திறமை
தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்
அந்த மேற்கு மொழிகள்
புவிமிசை யோங்கும்—'

என்றொரு பேதை கூறியதைக் கேட்டு அன்று குமுறியெழுந்தான் பாரதி. இன்றைக்கு மேற்கு நாடுகளில் வளருகின்ற அந்த மேன்மைக் கலைகளை—விஞ்ஞானப் புதுமைகளை — அறிவியல் கருத்துக்களை—தமிழிலே மிக அழகாகச் சொல்ல முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுவருகிறது. தமிழால் முடியாதது ஏதுமில்லை — தமிழால் எதுவும் முடியும்—என்கிற உண்மையை மெல்லமெல்ல அனைவருமே அனுபவ ரீதியாக உணர்ந்துகொண்டு வருகின்றனர்.

நவீன விஞ்ஞானக் கருத்துக்களையும், அறிவியற் கருத்துக்களையும், தமிழிலேகூறும்


இரா. கணேசன்

போது எழுகின்ற சிக்கலான ஒரு பிரச்சினைதான் கலைச் சொல்லாக்கம், மொழி பெயர்ப்பு போன்றவையாகும்.

கலைச்சொல்லாக்கம்என்று கூறிக்கொண்டு அறுவசியமான முறையில்—கனியிருப்பக் காய் கவர்ந்திடுவது போல— தூய தமிழில் பொருத்தமான நல்ல பழைய சொற்கள் இருக்கக்கூடியதாக, அவற்றை ஆராய்ந்து தேடி எடுப்பதை விடுத்து— பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே தமிழில் புகுத்துவதில் மிகமும்முரமாக முனைநிற்கிறார்கள் தம்மை தமிழறிஞர்கள் என்று கூறிக்கொள்ளும் சில தமிழ்க்கொலைஞர்கள். சொல்லாக்கம் எனும் போர்வையின் கீழ் நடைபெற்று வரும் தமிழின் தூய்மையை கெடுக்கின்ற இத்தகைய தீச்செயலை தமிழ்ப் பற்றுளர்கள் வலிமையுடன் எதிர்த்து வந்திருக்கிறார்கள். எப்போதும் எதிர்த்து வருகின்றனர்.

மிகவும் இன்றியமையாத-தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் வேற்று மொழிச் சொற்களை தமிழில் ஒலிப்படுத்தி பயன்படுத்துவதுவேறு; வேண்டுமென்றே, தமிழில் நல்ல பொருத்தமான தூய சொற்கள் இருக்கக்கூடியதாக வேற்றுமொழிச் சொற்களை புகுத்துவது என்பது வேறு; முன்னது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது—பின்னது கடுமையாக எதிர்க்கப்படவேண்டியது.

லக்சல, சலுசல, ஜாதிக சம்பத, போன்ற ஏராளமான சிங்களச் சொற்கள் இன்று தமிழிலும் அப்படியே வழங்கப்படுகின்றன என்றால் — இவற்றுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் தமிழில் கிடைக்காததால் அல்ல — இது வேண்டுமென்றே, தமிழ் மீது நடத்தப்படும் மொழித் திணிப்பாகும். தமிழின் தூய்மையையும், தனித்தியங்கும் ஆற்றலையும் கெடுத்து மாசுபடுத்துகின்ற ஏற்பாடாகும். இது தமிழ்மக்கள் அனைவராலும் எதிர்க்கப்பட வேண்டிய மொழித் திணிப்பாகும்!

அறிவியல் கருத்துக்களையும் விஞ்ஞானப் புதுமைகளையும் தமிழில் சொல்வதற்கு ஏற்ற தூயதமிழ்ச் சொற்கள் தமிழிலே இல்லையென்ற கருத்தையும் நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளமுடியாது; ஏனெனில் மேல்நாட்டு விஞ்ஞானிகள், 'அற்றெம்' (*Atom*) எனப்படும் ஆற்றலைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே, அழகிய தமிழின் அதனை 'அணு' என்று பழைய தமிழ் இலக்கியங்களில் கூறி வைத்திருக்கிறார்கள்; அணுவைக்கூட துளைக்க முடியும் என்று எழுதிவைத்திருக்கிறார்கள். எனவே பழைய தமிழ் நூற்களையும், இலக்கியங்களையும் ஆராய்ந்தால்—இன்றைய நவீன அறிவியற் சொற்களுக்கு ஏற்ற பொருத்தமான தூய்மையான தமிழ் சொற்களை நாம் கண்டுபிடித்திட முடியும்.

தமிழில் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு போன்றவற்றில் மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய மற்றோர் விடயம்- மொழி ஒருமைப்பாடாகும். தமிழ் வழங்கும் நாடுகள் அனைத்திற்கும் பொதுவாக ஒரே மாதிரியான தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டால் மட்டுமே—நாட்டுக்கு நாடு தமிழ் வேறுபடாமல், மாறுபடாமல் - ஒருமைப்பாட்டுடன் ஒரே மொழியாக தொடர்ந்து நிலைத்து நீடித்து நிற்க முடியும்.


உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் ''கலைச் சொல்லாக்கம்'' பற்றிக் கட்டுரை படிக்கிறார் திரு. க. நவசோதி. இக்கருத்தரங்குக்குத் தலைமை வகித்த பேராசிரியர் சின்னத்தம்பியையும் படத்தில் காணலாம்.

தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு சூழ் கலைவாணர்களாலும் — இவள் என்று பிறந்தவள் என்று உணரமுடியாத காலத்திலிருந்து உயர் தனிச் செம்மொழியாக மிளிர்ந்திடும் தமிழ்மொழி, இனிவரப் போகும் பல்லாயிர பல்லாயிர ஆண்டுகளுக்கும் இதே சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்திடவேண்டின், எல்லாத் தமிழ்பேசும் நாடுகளுக்குமிடையே மொழி ஒருமைப்பாடு பேணப்படுவது மிகவும் இன்றியமையாததாகும்;

இத்தகைய மொழி ஒருமைப்பாட்டை—சொல்லாக்கத்துறையிலும், ஏனைய துறைகளிலும் பேணி வளர்க்கக்கூடிய திறனும் தகுதியும், கடமையும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கே உண்டு. அதனால் தான் கலைச் சொல்லாக்கத்தில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமென்பதை இந்த மன்றம் தனது மூலாதார நோக்கங்களில் ஒன்றாக ஏற்றுக்கொண்டிருக்கிறது:

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்ற போது தமிழ் வழங்கும் நாடுகளிடையே பொதுவான கலைச் சொற்களை உருவாக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கொள்கை பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின்போதும்-கலைச்சொல்லாக்கம் மொழிபெயர்ப்பு போன்ற பிரச்சினைகள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. இதில் அரசகரும மொழித் திணைக்கள மொழி பெயர்ப்பாளர் திரு. க. நவசோதி, தமிழகத்திலிருந்து வந்திருந்த புலவர் இராசு, இரா. கணேசன், கொடுமுடி சண்முகம், ஈழவேந்தன், கரிகாலன், அனக மனோகரன் ஆகியோர் பங்குகொண்டு நல்ல பல கருத்துக்களை முன்வைத்தனர்.

''இலங்கை இந்திய தமிழ்க் கலைச்சொல்லாக்க முறைகளும், அடிப்படை வேறுபாடுகளும்'' எனும் பொருள் பற்றி கட்டுரைப் படித்த திரு. நவசோதி, இலங்கையிலும் இந்தியாவிலும் வழங்கப்படும் கலைச் சொற்களிடையே ஒருமைப்பாடு காணப்படாதது மட்டுமல்ல —இலங்கையில் கையாளப்படும் கலைச்சொற்களிடையேகூட ஒருமைப்பாடு பேணப்படவில்லையென்பதை உதாரணத்துடன் தமது கட்டுரையில் சுட்டிக்காட்டியிருந்தார்:

1933ம் ஆண்டு சுவாமி விபுலானந்த அடிகளை தலைவராகக் கொண்டு திருநெல்வேலி சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட ''கலைச்சொற்கள்'' எனும் தொகுதி இலங்கை-இந்திய அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டின் கன்னி முயற்சியின் சின்னமாக விளங்குவதை எடுத்துக்காட்டிய திரு. நவசோதி, தமது கட்டுரை முடிவில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-


திரு. ஈழவேந்தன்

''இலங்கை இந்திய நாடுகளில் உயர் கல்வித்துறை ஆட்சியாளரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றமையினால் இரு நாட்டுக் கலைச் சொற்களிடையே அமைந்த ஒருமைப்பாடு இருநாட்டு அரசாங்க மட்டத்தில் ஏற்படக்கூடியதல்லாமல் கடந்த மாநாடுகளில் சுட்டிக்காட்டியதைப் போன்று Bureau of Translation போன்றதான தனி நிறுவனங்களினால் ஏற்படுத்த முடியாததாகும்!'' என்று தமது முடிவைத் தெரிவித்தார்;

திரு. நவசோதி தெரிவித்தது நல்ல யோசனைதான்! ஆனால் இலங்கையிலோ - இவ்வாறு தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தில் அக்கறை எடுத்து, இலங்கை-இந்திய தமிழ்மொழி ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இலங்கைத் தமிழர்களுக்கென்று தனியான சொந்த ஆட்சி இல்லையே! சிங்கள ஆட்சி, இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்குமிடையே ஏற்கெனவே நீண்டகாலமாக இருந்துவருகின்ற உறவுக்கும் தொடர்புக்கும் வேட்டு வைக்கின்ற செயல்களில் அல்லவா திட்டமிட்டு ஈடுபட்டுவருகிறது! இலங்கையில் தமிழர்களுக்கு தனியாட்சி இருக்குமானால், திரு. நவசோதியின் யோசனை செயல்படுத்தக் கூடியதே.

இது சம்பந்தமாக திரு. ஈழவேந்தன் பின் வருமாறு கருத்துத்தெரிவித்தார். திரு. ஈழவேந்தனின் கருத்தை, புலவர் இராசு, இரா. கணேசன் ஆகியோர் வரவேற்றுப் பாராட்டிப் பேசியது இங்கு குறிப்பிடத்தக்கது.

'மொழிபெயர்ப்பு என்றாலும்சரி, கலைச் சொல்லாக்கம் என்றாலும் சரி முதலில் நாம் கவனிக்க வேண்டியது மொழியின் தூய்மையைத்தான் மொழித்தூய்மையை — உயர்தனிச் செம்மையை பாதுகாப்பதை முதலில் மனதில் கொள்ளவேண்டும். இன்று இந்நாட்டிலே அதிகார பீடத்தில் உள்ளோரால், தமிழுக்குள் சிங்களச் சொற்கள் வலிந்து திணிக்கப்படுகின்றன; லக்சல, சல்பில, சேசத்த போன்ற ஏராளமான சிங்கள சொற்கள் அதே சிங்கள ஒலியுடன் தமிழில் திணிக்கப்பட்டு வருகின்றன. இதை நாம் அனுமதித்தால், தமிழும் ஒரு கலப்புமொழியாகி விடும்.

பிறமொழிச் சொற்களை தமிழுக்கு கடனாகப் பெறுவது சாதாரணமாக தேவையற்றதாகும். மிக இன்றியமையாத, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டும் பிறமொழிச் சொற்களை —தமிழ் ஒலியோடு ஒத்து இயங்கக் கூடிய சொற்களை — தமிழுக்கு பெற்றுக்கொள்வதில் தவறில்லை.

சொல்லாக்கத்தைப் பொறுத்தவரை மூன்று வழிகளை பின் பற்றலாமென்பதை அறிஞர்கள்

(4-ம் பக்கம் பார்க்க


நினைவிருக்கட்டும்-யூலை 27,28

ஈழத்து தமிழ் நாடக மேடையில்
ஒரு புதிய முயற்சி!

''புளுகர் பொன்னையா'' கலைஞர்கள்
சிரிப்புடன் சிதறும் சிந்தனைச் சுடர்!

டாக்டர் கோவூரின்...
நம்பிக்கை



ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கையில் இடம்பெற்ற அதிசயமான உண்மைச் சம்பவங்களுடன் நகைச்சுவை விருந்தையும் அள்ளித் தருகிறர் ''புளுகர் பொன்னையா'' வாக புகழ்பெற்ற ''வரணியூரான்''

இடம்: பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்

# 'கொட்டுந் தமிழ் முரசம் கேட்டே குமரா! வருவாய்!'

—வட்டூர்ப்பங்கய மணாளன்—

வஞ்சக் கொடும் அரசின் நஞ்சுப் பகைச்சிறையை
நெஞ்சம் வெறுத்தனதோ?—உன்
பிஞ்சுத் தளிர்க் கரங்கள் 'உஞ்சுப்' படைக்கயவர்
வஞ்சம் வெறுத்தனதோ?—பழங்
கஞ்சிக் கயவன் அடிகள் தஞ்சம் எனப்புகலும்
பஞ்சத் தமிழ் இனத்திலே—கொடும்
நஞ்சே உனக்கின்று தஞ்சம் எனக்கொண்டாய்
நெஞ்சம் வெறிகொள்ளுதே!

எங்கும் தமிழ் மறவா என்னும் புகழ்பெருகச்
சங்கம் வளர்த்த தமிழன்—இன்
றெங்கும் தனையழித்துப் பங்கப்படும் நிலைமை
எண்ணி மனம் வெந்ததோ?—எம்
கண்கள் குளப்படவே எங்கள் பெரும் நகரம்
கொள்ளைப் பட நேர்ந்ததே!—தமிழ்ப்
பெண்கள் நிலை குலையத் தங்கத் தமிழ்விழவு
பங்கப் படல் ஆனதே!

அந்தக் கொடும் நிலைமை கண்டுன் உளம்வெதும்பித்
துன்பப் படல் ஆனதே!—கொலை
மந்திப் படைத் தலைமைச் சண்டித்தனம் கொடுமை
நெஞ்சைச் சுடல் ஆனதே!—தமிழ்க்
கந்தப் பழம்முருகன் எங்கள் தமிழ் இனத்தில்
வந்தேயுதித்த குமரா!—நீ
பந்தத் நினை மறந்து சந்தை தெருக்களிலே
தங்கித் தலை மறைந்தனை—

பத்துத் தலை முறைகள் செத்துப்பிறந்திடினும்
வித்தாய் விளங்கு குமரா!—உனைப்
பெற்றுத் தமிழ்த் தாய்க் குத்தத்துக் கொடுத்தவளை
நித்தம் நினைத்துப் பணிவோம்!—உன்
பட்டுத் தளிர் உடலைச் சுட்டுத் தகர்த்திடினும்
முத்தாய்ப் பெயர் வாழுமே!—பகை
வெட்டிக் குலைத் தொருநாட் கொட்டுந்தமிழ்முரசம்
கேட்டே குமரா வருவாய்!

● ● ●

## இனிக்காண்பதெங்கே?

தனலெட்சுமி கணேசு, திருநெல்வேலி

செய்தவம் விளங்க சீர் பெறு தமிழனை
உய்யவே உதித்த பைந்தமிழ்ச் செல்வன்
பார் புகழ்ந்தேத்தும் சிறப்புடன் மறைந்தான்
சீர் பெறு தமிழின் செல்வன் 'சிவகுமாரன்''
கடமையைச் செய்ய களம் புகுந்த காளை
உடமையே தமிழ் எனும் உயர் கொள்கை பூண்டவன்
அடிமையில் மாளும் நமக்கு ஒளிவிளக்கானவன்
விடலை போல் விழுமிய வீரன் ''சிவகுமாரன்''
கொள்கையைப் போன்ற உள்ளம் குலவும் தமிழ்க்
கோலம்.
செவ்வியோன் தேடித்தந்த ஆக்கம் தமிழர்க்கே
சொந்தமாகும்
தெள்ளிய தமிழுக்காகத் தன்னுயிர் ஈந்தான்
அந்தோ!
கள்வமோ அறியாவுள்ளம் இனிக்காண்பதெங்கே?

● ● ●

## இதயத்தில் நீ

—செல்வி து. விஜயலட்சுமி

உரும்பராய் பிறந்து
உறுதியுடன் வளர்ந்து
எம்முயிர்க்கு
உன்னுயிர் ஈந்த,
இணையிலாத் தோழன்,
எம் சிவகுமாரா!
நீ அனலுடன் கலந்து விட்டாயா? — இல்லை
எம் இதயத்தில் கலந்து விட்டாய்

● ● ●

## எங்கள் சிவகுமாரன்

—திருக்கோணமலைக் கவிராயர்

அரும்பணிபுரியும் உரும்பிராய் தன்னில்
பெரும் புகழ் வாய்ந்த பெற்றோர் தமக்கு
அரும் பணியாக சேய் சிவகுமாரன்
வரம் தர எனவே வந்தவதரித்தான்.

வண்டமிழ்ப்பாலை உண்டுதவழ்ந்தான்
வலிமையை இளமையில் உணர்ந்தே வளர்ந்தான்
கண்டாளர் மத்தியில் சமர் செய எழுந்தான்
தொண்டனாய் நின்று தூய்மை தொடர்ந்தான்

சிறையில், இருளின் அறையுள் கிடந்தான்
சிரந்தனை நிமிர்த்திச் சிங்கமாய் நடந்தான்
இளமையில் தமிழரின் இன்னலை துடைத்திட
தன்மையை வரித்துப்படையுடன் கிளர்ந்தான்

மறக்குலம் நாமென மார்பினை உயர்த்தினன்
சமர்க்கொடி பிடித்துச் சரித்திரத்து இறந்தான்
''பறத்தமிழ்'' என்பார் பல்லினை நொருக்கச்
செருப்பொடு புறந்தே, நெருப்பென நின்றான்

தலை வணங்காமல், தலையினைச் சரித்தான்
தமிழர்கள் அழ, அழ தமிழுடல் அழித்தான்
நிலை பெயராதநின் பொன் மணம் கமழும்
தலைமுறையாக நின் தமிழ்ப் பெயர் நிலவுமே

# சிவகுமார் என்றிடும் போதினிலே...!



வீரம் என்பது இன்றைய தமிழனுக்கு வெறும் மேடைப் பேச்சுக்குரிய பொருளாகிவிட்டது.

வாய் வீரத்தில் மட்டுமே இன்றைய தமிழன் வல்லவனாகக் காணப்படுகிறான்.

தமிழனுடைய வீரத்தைப் பற்றிப் பார்க்கவேண்டுமானால், சங்க இலக்கியங்களைத்தான் புரட்டவேண்டியிருக்கிறது.

இன்றைய தமிழனின் கோழைத்தனத்தை எண்ணிப்பார்க்கும்போது — இவனா சங்ககால இலக்கியம் போற்றும் வீர சாகசங்களைப் புரிந்த வீரத்தமிழனின் வாரிசு என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது.

அஞ்சி அஞ்சிச் சாவான் தமிழன் — இவன் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே!

இன்றைய தமிழனது கோழைத்தனத்தைக் கண்டுதான் இப்படிக் குமுறிப் பாடினான் பாரதி.

பல்லாயிர ஆண்டுகள் அடிமைத்தனத்தில் ஊறியதால் வந்த தீமை இது!

எதிர்க்கப்பட வேண்டியவற்றை — எதிர்ப்பதற்குகூட இன்றைய தமிழன் பின்நிற்கிறானே!

இன்றைய தமிழனை கோழையாக மாற்றியமைக்கு மற்றோர் காரணம்— மதங்களின் போதனை!

இந்த உலகம் பொய்யானது: அநித்தியமானது; வாழ்வாவது மாயம் — இது மண்ணாவது திண்ணம்; காயமே இது பொய்யடா இது காற்றடைத்த பையடா; ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு; என்பன போன்ற மத போதனைகள் தமிழனது இரத்தத்தில் ஊறி, அவனை காலாவட்டத்தில் கோழையாக்கி விட்டன!

அதனால் போராடியே தீரவேண்டிய நெருக்கடி ஏற்படும் நேரத்திலும் 'நமக்கேன் இந்த வம்பு' என்று பிரச்சினையிலிருந்து மெல்ல ஒதுங்கிக்கொள்ளுகிறான்.

மத வேதாந்தங்கள் அவனது கோழைத்தனத்தை மறைக்க ஒரு போர்வையாகி விட்டன!

மத நூல்களிலே எனக்குப் பிடித்தது - பாரதப் போரில் கண்ணனின் கீதோபதேசம்!

கீதையை ஒவ்வொரு தமிழனும் இன்றைய நிலையில் விரும்பிப்படிக்க வேண்டும்!

அப்போதுதான் புதிய தெளிவு பிறக்கும்! வீர உணர்வு பிறக்கும்!

விளைவைக் கண்ணனிடம் ஒப்படைத்துவிட்டு கடமையை ஆற்றவேண்டும் என்னும் ஓர்மம் பிறக்கும்!

இன்றைய தமிழனின் கோழைத்தனத்துக்கு இன்னோர் காரணம்—தாய்மார்கள்!

சங்க காலத்தில் தமிழ் பெண்கள் வீராங்கனைகளாக இருந்தார்கள். அதனால் தம் பிள்ளைகளையும் வீரர்களாக வளர்த்தார்கள்!

'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே'' என்று பாடவந்த சங்ககாலத்துப் பெண்பாற் புலவர் ஒருவர் அப்பாடலின் இறுதியில்,

'ஒளிறுவாள் அருஞ்சமம்
முருக்கி
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே!'

என்று கூறுவதன் மூலம் — பண்டைக் காலத்தில் தமிழ் பெண்கள் தங்கள் குலக்கொழுந்துகளை எத்துணை வீரநோக்குடன் வளர்த்தார்கள் என்பதை நமக்கு உணர்த்துகிறார்!

கணவனையும் மூத்த பிள்ளையையும், யுத்தகளத்திலே பலிகொடுத்துவிட்டு—அந்த நிலையிலும் உள்ளம் கலங்காது' தனது கடைக்குட்டியாகிய பால்மணம் மாறாப் பச்சிளம் பாலகனுக்கு நெய் தடவி தலைசீவி, பட்டாடை உடுத்து, வேலைக் கொடுத்து வீரப்போர் புரிந்திட அனுப்பிவைத்த வீராங்கனைகளை தமிழ் இலக்கியங்கள் புகழ்ந்து பேசுவதைப் பார்க்கிறோம்.

கோவை-மகேசன்

என் மகன் முதுகில் வேல்பட்டு இறந்திருப்பானாயின் அவனுக்குப் பாலூட்டிய முலைகளை அறுத்தெறிவேன் என்று வஞ்சினம் பூண்டு, போர்க்களம் சென்று அங்கு கிடந்த பிணங்களைப் புரட்டிப்பார்த்து — தன்மகன் நெஞ்சில் வேல் ஏந்தி மாண்டு கிடந்ததைக்கண்டு, ஈன்ற பொழுதிலும் பார்க்க பெரிதுவந்த தாய்மார்களையெல்லாம் தமிழகம் கண்டிருக்கிறது.

தாய்க்குலத்திடம் அன்றைக்கு அத்துணை வீரம் குடிகொண்டிருந்ததால் தான் தமிழ் சமுதாயம் வீரமுள்ள சமுதாயமாக திகழ்ந்திட முடிந்தது.

இன்றைய தமிழனிடமுள்ள கோழைத்தனம் மறைந்து வீரம் — மீண்டும் வளர வேண்டுமானால் — தாய்மார்கள் வீராங்கனைகளாக மாற வேண்டும்!

தங்கள் மழலைச் செல்வங்களுக்கு பாலும் சோறும் ஊட்டும் போதே வீரத்தையும் மானத்தையும் சேர்த்து ஊட்டவேண்டும்.

பெண்களால்தான் வீரர்களை உருவாக்க முடியும் — நாட்டு விடுதலைக்குப் போராடக்கூடிய சிங்கக் குட்டிகளை உருவாக்க முடியும்!

இதனால்தான் —

'வலிமை சேர்ப்பது தாய்
முலைப்பாலடா!
மானம் சேர்ப்பது
மனைவியின் வார்த்தைகள்!'

என்று கூறினான் பாரதி.

தமிழ் பெண்களின் வீரத்தைப்பற்றி புறநானூறும் ஏனைய சங்க இலக்கியங்களும் கூறியிருப்பவை பொய்யல்ல — புனைந்துரையல்ல உண்மையே என்பதை இன்று நம்மிடையே நிதர்சனமாக எடுத்துக் காட்டிக் கொண்டிருப்பவர் உரும்பராய் சிங்கம் சிவகுமாரனின் வீரத்தாயார் திருமதி அன்னலட்சுமி அம்மையார் அவர்கள்.

'சிவகுமாரன்' எனும் மாவீரனை உருவாக்கிய தமிழ் சமூகத்தின் பெருமதிப்புக்குரிய வீரப் பெண்மணி அவர்.

பாலோடு தமிழ் வீரத்தையும் தன்மானத்தையும் சேர்த்து ஊட்டி சிவகுமாரனை வளர்த்தவர் அவர்.

மரியாதைக்குரிய அந்த வீரத்தாயை தரிசிப்பதற்காக 'உரும்பராய்' எனும் ஊரின் வீதிவழியே நான் சென்றுகொண்டிருந்த போது—

காணப்படும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து காணப்பட்டன இன எழுச்சிச் சுலோகங்கள்! தமிழனுக்கு வீர உணர்ச்சியூட்டிடும் வாசகங்கள்! விடுதலைப் போருக்கு வேகம் சேர்த்திடும் வீர வரிகள்.

இவைகளே சிவகுமாரன் பிறந்த ஊர் அது என்பதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன!

ஒருவேளை அவையத்தனையுமே சிவகுமாரனின் உணர்ச்சியின் விளைவுதானோ என்னவோ! யார் கண்டார்கள்?

அந்த மண்ணின்மீது நடக்கும்போது உடல் முழுவதும் புளகாங்கிதமடைந்தது; மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. கண்கள் குளமாயின!

சிவகுமாரன் பிறந்த ஊர்! சிறுதேர் உருட்டி அவன் விளையாடித்திரிந்த வீதிகள்! அவன் காலடிபட்ட புனித மண்!

கீழே குனிகிறேன்!

அந்த மண்ணைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்கிறேன்!

சிவகுமாரனின் இல்லம் எங்கே?

எதிரே வந்த ஒரு சிறுமியிடம் கேட்கிறேன் — 'சிவகுமார்' என்ற சொல் கேட்டதுமே கண்கலங்கிய அச்சிறுமி 'அதோ தெரிகிறதே— அதுதான்' என்று சுட்டிக்காட்டுகிறாள்!

இந்துக்கள் காசி விஸ்வநாதர் ஆலயத்துள் நுழையும்போது எப்படி புனித நினைவுகளுடன் நுழைவார்களோ — இஸ்லாமியர்கள் புனித மெக்காவுக்குள் நுழையும் போது எப்படி புனித எண்ணங்களுடன் நுழைவார்களோ — கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் நகருக்குள் எவ்வாறு தூய்மையுணர்வுடன் புகுவார்களோ — அதேபுனித உணர்வுடன் சிவகுமாரன் பிறந்து வளர்ந்து வாழ்ந்த 'அந்த' இல்லத்தினுள் நுழைகிறேன்—

— வளரும்

## எண்ணம்

# வெள்ளி விழாவா? கொள்ளை விழாவா?

நெஞ்சில் தோன்றுவதை யாருக்கும் எதற்கும் அஞ்சாமல் அப்பட்டமாகக் கூறிடும் துணிச்சல்காரர் என்று பொதுவிவகார உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவைப் பற்றிக் கூறுவார்கள்.

அப்படிப்பட்ட துணிச்சல்காரரான அமைச்சர் யாழ் மாநகர சபையைப்பற்றி அப்பட்டமானதோர் உண்மையை அண்மையில் வெளியிட்டிருக்கிறார்.

மேற்படி மாநகரசபையின் வருமானத்தில் இரண்டு சத விதம் கூட நாட்டின் உண்மையான அபிவிருத்தி வேலைகளுக்கு செலவிடப்படவில்லையென்பதை அமைச்சர் தெட்டத்தெளிவாக கூறியிருக்கிறார்.

அமைச்சரின் கூற்றுப்படி தனது வருமானத்தில் இரண்டு சத விகிதத்தைக் கூட நாட்டின் அபிவிருத்திக்காக செலவிடாத யாழ் மாநகர சபைதான் 'வெள்ளிவிழா' என்று கூறிக்கொண்டு ஒருவார காலத்துக்கு மக்களின் வரிப் பணத்தில் ஆடம்பர கொண்டாட்டங்களும் தமாஷாக்களும் நடத்தி வருகிறது.

ஜனநாயக தர்மத்தின்படி யாழ் மாநகர சபையை நிர்வகிப்பதற்குரிய உரிமையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இழந்துவிட்ட துரையப்பா கும்பல்—ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தப்பிப்பிழைத்து—மாநகர சபையின் அதிகாரத்தை தொடர்ந்து கையில் வைத்துக்கொண்டு மக்களை வாட்டிவதைத்து வருகிறது.

மாநகர அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு துரையப்பா கும்பல் ஆடும் ஆட்டத்தையும் அகப்பட்டதை சுருட்டும் அரசியல் விபச்சாரத்தையும் கண்டு யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

நிர்வாகச்சீர்கேடு, ஊழல், ஒழுங்கீனம், சர்வாதிகாரம் போன்ற பல்வேறு தீமைகளின் குகையாக துரையப்பா கும்பலின் நிர்வாகம் இருந்து வருவதாக மக்கள் சந்தேகிக்கிறார்கள்; வரியிறுப்பாளர்கள் பகிரங்கமாகவே பேசிக்கொள்ளுகிறார்கள்.

துரையப்பா கும்பலின் நிர்வாகச் சீர்கேடு யாழ் மாநகரம் முழுவதுமே புடைநாற்றம் அடிக்கிறது தமிழ் ஈழத்தின் தலைநகரான யாழ் மாநகரின் அலங்கோல ஆட்சி கண்டு ஒவ்வொரு தமிழனுமே அவமானத்தால் கூனிக்குறுகிப் போகிறான்!

உலகத் தமிழ் மாநாட்டுக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்க துரையப்பா கும்பல் மறுத்ததும், அதன் விளைவாக சனவரி பத்தாம் திகதிப் படுகொலை இடம்பெற்றதும் —எவருமே என்றுமே மறக்கக்கூடிய நிகழ்ச்சியா? அல்லது அதை மன்னிக்கத்தான் முடியுமா?

துரையப்பாவின் துரோகப் போக்கைக் கண்டு உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டறிஞர் ஒருவர் அவரை ஒரு Funny Mayor என்று கிண்டல் செய்ததை எவராவது மறக்கமுடியுமா?

இப்படி யாழ் மாநகர மக்களினதும், தமிழ் சமுதாயத்தினதும் அவமானச் சின்னமாக—அசிங்கமாக இருந்துவரும் துரையப்பா கும்பல்தான் வெள்ளிவிழா என்று வேஷம் போடுகிறது; மக்களின் வரிப்பணத்தில் வேடிக்கை காட்டுகிறது!

அவசர காலச் சட்டத்தின் கீழ் அரசு போடும் அதிகார பிச்சையால் ஆட்டம்போடும் துரையப்பா கும்பல், தமிழ் சமுதாயத்தின் உரிமைகளை அங்கீகரிக்க மறுக்கும் சிங்கள அமைச்சர்களை வெற்றிலை வைத்து அழைத்து, தமிழினத்தின் கௌரவத்துக்கே இழுக்குத்தேடி விட்டது.

மக்களின் ஜனநாயக உரிமைகளைக்கொள்ளையடித்துக் கொண்டு, 'வெள்ளி விழா' நடத்தும் மக்கள் விரோத சக்திகளை, யாழ் மாநகர அரசியலிலிருந்து வேரோடு கில்லி எறிவதற்கு எப்போது வரும் தேர்தல் என்று தயாராகக் காத்திருக்கிறார்கள் மாநகர வாக்காளர்கள்!

ஆம், வெள்ளி விழா நடத்திய வீணர்கள் கூட்டத்துக்கு அடுத்த தேர்தலின் போது யாழ் வரியிறுப்பாளர்கள் 'கொள்ளி' வைக்கப்போவது நிச்சயத்திலும் நிச்சயம்!

துணிவிருந்தால், திராணியிருந்தால் தேர்தலை உடனே நடத்திப் பார்க்கட்டும்.

# யாழ். மாநகரசபையைக் கலைப்பதற்கு அமைச்சர் தயங்குவதேன்?

யாழ் மாநகர சபையின் வெள்ளிவிழாவை பொதுமக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று நான்கு மாநகர சபை உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

விழாவை பகிஷ்கரிக்க வேண்டுமென்பதற்குரிய காரண — காரியங்களையும் அவர்கள் தங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவற்றை எந்த நடுநிலையாளரும் மறுத்துரைக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

யாழ் மாநகர சபை நிர்வாகம்பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாக பரவலான கண்டனம் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஊழியர்களது நியமனங்களில் ஊழல், அரசியல் பாரபட்சம் வெளிப்படையாக—ஒளிவு மறைவின்றி காட்டப்பட்டு வந்திருக்கிறது.

தகுதி-திறமை, கல்வி தராதரம் எதற்கும் மதிப்புக் கொடுக்கப்படாமல் அரசியல் இலாபம் ஒன்றை மட்டும் மனதில்வைத்து வேண்டாத — தேவையற்ற முறையில் நூற்றுக்கணக்கான நியமனங்கள் நடைபெற்றிருப்பதாக சொல்லப்படுகிறது.

இதன்மூலம் வரியிறுப்பாளர்களது பணம் கரியாக்கப்பட்டு வீண் விரயம் செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் மாநகரசபை ஆக்கபூர்வமான சாதனை எதையும் சாதிக்கவில்லை யென்பதை நாம் மட்டுமல்ல — கனம் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களே பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார் வருமானத்தில் நூற்றில் 2 விழுக்காட்டை மட்டுமே யாழ் மாநகரசபை ஆக்கப்பூர்வமான விடயங்களுக்கு செலவழிப்பதாக அமைச்சர் மாநகரசபை நிர்வாகத்தை சாடியிருக்கிறார்.

சில திங்களுக்குமுன் யாழ் மாநகரசபை நிர்வாகத்தைப்பற்றி பாராட்டி பேசிய அதே அமைச்சர் இப்போது கண்டித்துப் பேசுவதன் காரணம் நிர்வாக நாற்றம் பொறுக்க முடியாத அளவுக்கு போய் விட்டதையே காட்டுகிறது.

கனம் அமைச்சர் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியல் காரணங்களுக்காக உள்ளூராட்சி மன்றங்கள் எவையும் கலைக்கப்படவில்லையென்றும், நிர்வாக சீர்கேட்டிற்காகவே அவை கலைக்கப்படுவதாகவும் அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

ஆனால் அமைச்சரது சொல்லுக்கும் செயலுக்கும் பெரிய இடைவெளியிருப்பதாக நாம் முன்பு பல முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

திருமலை நகரசபை கலைக்கப்பட்டதற்கு நிர்வாக சீர்கேட்டைவிட அந்த சபை குடியரசு விழாவை பகிஷ்கரித்து கறுப்புக்கொடியை பறக்க விட்டதே சரியான—அந்தரங்கமான காரணமாகும்.

அமைச்சர் ஒருபடி மேலே போய் நகர சபை நிர்வாகத்தை ஒரு சிங்கள ஆணையாளரிடமும் கையளித்திருக்கிறார்.

மட்டக்களப்பு மாநகர சபை கலைக்கப்பட்டதற்கும் முழுக்கமுழுக்க அரசியலே காரணம்.

இதே போலத்தான், வவுனியா நல்லூர், உடுவில் காரைநகர் கிளிநொச்சி உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் காரணங்களுக்காகவல்ல, நிர்வாக சீர்கேட்டிற்காகவே இம் மன்றங்கள் கலைக்கப்பட்டதாக வாதத்துக்காக ஒப்புக்கொண்டாலும், யாழ் மாநகர சபை நிர்வாக சீர்கேட்டை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்ட பின் அதைக் கலைக்க அமைச்சர் தயங்குவானேன்? வரியிறுப்பாளர்களிடம் சொல்லப் போகிறேன் என்று அமைச்சர் எதற்காக பூசி மெழுக வேண்டும்?

யாழ் மாநகர சபையைக் கலைப்பதற்கு அமைச்சர் தயங்குவதற்கு ஒரே காரணம் தமிழ் ஈழத்தின் தலைநகரான யாழ் மாநகரத்தின் அதிகாரம் சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த மேயரிடம் இருப்பதாக வெளியுலகுக்குக் காட்டிப் பெருமையடித்துக் கொள்ளும் வாய்ப்பை இழந்து விடுவதற்கு அமைச்சரும், அரசும் தயாரில்லை என்பது அன்றி வேறென்ன? நேர்மையாளர், கண்டிப்பானவர் என்று கருதப்படும் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா அவர்களே தனது கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக துரையப்பா கும்பலின் நிர்வாகச் சீர்கேட்டையும் ஊழலையும் அனுமதிப்பாராயின் இந்த அரசின் வேறு எந்த அமைச்சரிடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

மக்கள் நம்பிக்கையை எவ்வளவு தூரம் இன்றைய மாநகர சபையும் — அதன் மேயரும் இழந்து விட்டார்கள் என்பதை அமைச்சர் வெள்ளிவிழா ஏற்பாடுகளை நேரில் பார்க்கும்போது அறிந்து கொள்வார் என எதிர்பார்க்கிறோம்.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது யாரும் சொல்லாமல் விழாக்கோலம் பூண்டு புது மணப்பெண் போல் காட்சியளித்த யாழ்ப்பாணம் வெள்ளி விழாவின் போது பொட்டிழந்து — பூ விழந்து, கட்டிய தாலியை இழந்த விதவைக் கோலத்தில் காட்சியளிப்பது ஏன்?

இந்த வெள்ளிவிழாவை சர்வாதிகார மேயர் ஒருவரே மக்களது ஆதரவு இன்றி கூலிக்கு ஆட்களைப் பிடித்து மாநகரசபைச் செலவில் தனது சுய விளம்பரத்துக்காக கொண்டாடுகிறார் என்பதே எமது எண்ணம்.

— வணங்காமுடி

## சிவகுமாரனுக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

● அரசியலமைப்பு விதி திருத்தப்பட்டு, பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதே அரசியல் சட்டப்பாதுகாப்பு இந்து மதத்திற்கும் வழங்கப்பட வேண்டும்.

● இந்து சமய பாடத்தில் பிறசமயப் பாடங்களை வலிந்து புகுத்தும் கல்வி அமைச்சின் முடிவு இந்து மாணவர்களின் சமய நம்பிக்கையை தகர்த்தெறியும் ஒரு திட்டமாக இருப்பதால், அதை உடனடியாகக் கைவிட்டு விடவேண்டும்.

● பௌத்த மத கலாசாரப் பணிகளுக்கு அரசினால் வழங்கப்படும் அதே அளவு மானியம் இந்து சமய கலாசார பணிகளுக்கு வழங்கப்படவில்லை யென்பதை சுட்டிக்காட்டி, இந்தப் பாரபட்சத்தைப் போக்குமாறு அரசிடம் கோருவது.

இந்து இளைஞர் பேரவையின் புதிய தலைவராக திரு. துரைராஜா ஸ்ரீகாந்தகுமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## இ. தொ. கழக உறுப்பினரின் உதவி!

அத்தப்பனையைச் சேர்ந்த மாரியுத்தோட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் தொழிலாளி முத்தம்மா என்பவர் கடந்த 15-6-74ல் உடப்பு சலாவைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக இராகலை பஸ் நிலையத்திலேயே ஒரு பெண் குழந்தையை பிரசவித்தார். இந்நேரத்தில் பஸ் நிலையத்தில் நின்ற பிரயாணிகள் செய்வதறியாது திகைப்படையவே இ. தொ. கழக உறுப்பினர் ஒருவர் மேற்படி விடயமாக கழகப் பிரதிநிதி திரு. வ. ஆ. நாதன் அவர்களிடம் முறையிட அவர் இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பாளருடன் தொடர்புகொண்டு சம்பந்தப்பட்ட தொழிலாளியை பொலிஸ் அதிகாரியின் உதவியுடன் உடப்புசல்லாவ வைத்திய பணிமனைக்கு எடுத்துச்சென்றனர். இது சம்பந்தமான செய்தி முத்தம்மாவின் கணவர் திரு. பொன்னுசாமிக்கு அறிவிக்கப்பட்டது.

## யாழில் விழுந்த அடிக்கு சிங்கப்பூரில் சிகிச்சை!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழ் மாநாட்டில் பார்வையாளராக சிங்கப்பூரிலிருந்து வந்து கலந்துகொண்டனர் திரு. ம. பெ. சாமி அவர்கள். மாநாட்டின் இறுதி நாளன்று நடந்த பொலிஸ் வெறியாட்டத்தில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் திரு. ம. பெ. சாமியும் ஒருவர்.

பொலிசாரின் தாக்குதலின்போது மேடையருகேயிருந்த திரு. சாமி, கண்ணீர்புகையினால் பாதிக்கப்பட்டு ஓடிச்சென்று மதில் ஒன்றின் மீது மோதிக்கொண்டார். இதனால் நெஞ்சில் இரத்தம் கட்டி கடந்த பல மாதங்களாக சிங்கப்பூரில் அவர் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் செய்தியை தனது இலங்கை நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கும் திரு. பெரியசாமி சிங்கப்பூர் தமிழர் இயக்கத்தின் அமைப்புச் செயலாளர் ஆவார்.

# அருளம்பலம் தூங்குகிருரா? 20 இலட்சம் ஏன் செலவிடப்படவில்லை!

மாவட்டத் திட்டத்தின் கீழ் புது வேலைகளுக்கு 120 லட்சம் ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் அரசாங்கம் இருபது லட்சம் மட்டும் கொடுத்தது. ஏன் இப்படித் தமிழ்ப்பகுதியைப் புறக்கணிக்கிறீர்கள் நூற்றிருபது லட்சத்தையும் யாழ்ப்பாணத்துக்குக் கொடுங்கள் என்று சென்ற 6/6/74 இல், தேசிய அரசுப் பேரவையில் காவலூர் பா. உ. கா. பொ. இரத்தினம் கேட்டார்.

பிரதி அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி என்ன மறுமொழி கூறினர் தெரியுமா? கொடுக்கப்பட்ட இருபது லட்சம் ரூபா இன்னும் செலவழிக்கப்படவில்லை. இதைச் செலவு செய்தபின் மேலும் கொடுக்கலாம் என்றார்.

இந்தப்பணத்தை விரைந்து செலவு செய்ய வேண்டிய முழு அதிகாரமும் பொறுப்பும் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அதிகாரி திரு. அருளம்பலம் பா. உ. எனும் பெருமகனுக்கே உரியது. அவர் தூங்குகிருரா? தூங்க வைக்கப்பட்டுள்ளாரா? யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஐஸ்பெட்டிக்குள் அடக்கப்பட்டு விட்டனவா? யாழ்ப்பாண மாவட்டமே இதுவா உன்தலைவிதி! என்று கேட்கிருர்கள் வடபகுதித் தமிழ் மக்கள்—

## சிவகுமாரன் சிறையில் எழுதிய கவிதை

காப்பு

தும்பிக்கையோனே துதி செய்தேன் என் துணைவா
நம்பிக்கை தொழுதெழுந்த நவின்றிடுவேன்-என்றும்,
துப்பாக்கி துணைக்கொண்டு தமிழ்நாடு காண்போர்க்குத்
தப்பாமற் தானுதவி தா!

வெண்பா

செந்தமிழ் உரிமைச் சேறு கலக்கிட
வெந்தழல் வீழினும் அஞ்சேன்—எம்
பைந்தமிழ் அன்னையாள் பல்லூழி வாழ்ந்திட
மைந்தா நீ மறவனாய் மாறு!

பாராண்ட தமிழினம் பதறித் துடித்திட்டே
வேரோடு சாய்ந்திடல் நன்றோ — என்றும்
அந்தமில் எம்மொழி அவனியை யாண்டிட
மைந்தா நீ மறவனாய் மாறு!

சிறைச்சாலை சென்றங்கு சிவனே போனாலும்
மறக்காமற் தமிழொன்றே சொல்வேன்—என்றும்
எந்தமிழ் மாதா ஏற்றத்தைப் பெற்றிட
மைந்தா நீ மறவனாய் மாறு!

இங்களம் வென்றெம் சீர்குலைத்திடுங்கால்
செங்களம் வீழினும் துஞ்சேன் — எங்கள்
சொந்தமதான தமிழ் ஈழத்தைப் பெற்றிட
மைந்தா நீ மறவனாய் மாறு!

நலமுடன் அன்று நாடாண்ட நந்தமிழ்
பலமிழந்தழிந்திடல் நன்றோ—எங்கள்
சுந்தரத் தமிழினைத் துலங்கிடச் செய்குவோம்
மைந்தா நீ மறவனாய் மாறு!

● துரையப்பாவினுடைய காருக்கு வெடிகுண்டு வைத்ததாகச் சந்தேகத்தின்பேரில் சிவகுமாரனைக் கைதுசெய்து சிறையில் அடைத்துவைத்திருந்தபோது, அவர் சிறையிலிருந்து எழுதிய பாடல்களே இவை.

## துரோகப்பரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டனர் யாழ் மாநகர மக்கள். வெள்ளிவிழாவின் போது மாநகர வீதிகள் செத்த வீடு போலக் காட்சியளித்தன. தமாஷாக்களை பொதுமக்கள் பகிஷ்கரித்தனர்.

வெள்ளி விழாவை தொடக்கி வைப்பதற்கு யாழ்ப்பாணத்துக்கு சென்ற உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவை வரவேற்பதற்கு ஆள் திரட்டுவது பெரும்பாடாகி விட்டதாம். இறுதியில், கூட்டுறவு சங்கங்களை மூடிவிட்டு, கூட்டுறவுச் சங்க லொறிகளில் மேற்படி சங்க ஊழியர்கள் ஆளைவரும் ஆளுக்கு ஒரு மாலையுடன் அமைச்சரை வரவேற்க விமான நிலையம் நோக்கி வரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

வெள்ளிவிழாவைப் பகிஷ்கரிக்கும்படி யாழ் பொதுமக்களை யாழ் மாநகர உறுப்பினர்களான திருவாளர்கள் தம்பு கந்தையா, நா. த. செல்லத்துரை (முன்னாள் உறுப்பினர்) தா.ச. துரைராசா, கி. நாகராசா, நீ அந்தோனிப்பிள்ளை ஆகியோர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர். அந்த பிரசுரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:—

"யாழ் நகர மக்கள் 1968-ம் ஆண்டு நான்கு ஆண்டுகளுக்கு தெரிவு செய்த மாநகரசபை காலாவதியாகி இரண்டு ஆண்டுகளாகிவிட்டன. இன்று யாழ் நகரத்தை நடத்துவது அவசரகாலச் சட்டத்தின் கீழ் மாதத்திற்கு மாதம் அமைச்சர் உயிர்ப்பிச்சை அளித்துவரும் மக்கள் தம் பிக்கையை இழந்துவிட்ட அல்பிரெட் துரையப்பாவும் அவர் குழுவுமாகும். இவர்கள் யாருடைய வெள்ளி விழாவைக் கொண்டாடுகிருர்கள்?

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு உரிய ஒத்துழைப்பு அளிக்காது ஜனவரி 10-ந் திகதிப் படுகொலைக்கு இடம் கொடுத்தவர்கள் ஔவையாருக்கும், வள்ளுவருக்கும் சிலை எழுப்பித் தாம் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்யவா இந்த வெள்ளி விழா?

வாழ்க்கைச் செலவுப் பழுவைத் தாங்கமுடியாமல் தத்தளிக்கும் ஏழை மக்களின் தலையில் கூடிய சோலை வரியைத் திணித்து மின்சாரக் கட்டணத்தை அதிகரித்துச் செய்த சாதனைக்கா வெள்ளி விழா?

நடமாடமுடியாமல் குண்டும் குழியுமாக வெளிச்சமற்று மக்கள் இடறிவிழும் வீதிகளுக்கா வெள்ளிவிழா? நாற்றமெடுக்கும் சாக்கடைகளுக்கா வெள்ளிவிழா?

மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முடியாத வங்குரோத்து நிர்வாகத்துக்கு வெள்ளைபூசவா வெள்ளிவிழா?

தமிழ் இனத்தை அவமதித்து உரிமை தர மறுக்கும் சிங்கள அமைச்சர்களை அழைத்துவந்து விருந்துபசாரம் செய்யவா வெள்ளி விழா?

யாழ் நகர மக்களே! மானமுள்ள மறக்குலமே! இந்த அர்த்தமற்ற வெள்ளி விழாவை முற்று முழுதாகப் பகிஷ்கரியுங்கள்.

## ● மன்னாரில் சிவகுமார் நினைவாக கஞ்சிவார்ப்பு!

மறைந்த மாபெரும் தமிழ் ஈழத்தின் விடுதலை வீரன் சிவகுமாரன் நினைவாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது. மன்னார் மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினரும் மற்றும் தமிழ் அபிமானிகளும் இந்நிகழ்ச்சியை முன்னின்று நடத்தினர்.

## ● கொழும்புத் துறையிலும் சிவகுமாரன் நினைவாக கஞ்சிவார்ப்பு!

தமிழ் இனத்தின் விடுதலைக்கு தன் தலை கொடுத்த வீரன் சிவகுமாரனது 31வது நினைவு நாளை கொண்டாடுமுமோக கொழும்புத்துறை வட்டார இளைஞர் பேரவை உறுப்பினர்களாலும், கூட்டணி ஆதரவாளர்களாலும் உரிமைக் கஞ்சி வார்க்கப்பட்டது.

ஏராளமான இளைஞர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றி இந்த வைபவத்தை எதிர்பார்த்ததிற்கும் மேலாக சிறப்பாக செய்து முடித்தனர் பொதுமக்களும் தாமாகவே முன்வந்து தாராளமாக நிதியுதவியும்—பொருளுதவியும் செய்தனர்.

தமிழ் அரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. சி. கதிரைவேற்பிள்ளை மன்னார் திரு. யேரன்மாக் இருவரும கலந்து கொண்டு உரையாற்றினர்.

கொழும்புத்துறை வட்டார மா. ந. சபை உறுப்பினரும், கூட்டணிப் பிரமுகருமான திரு. தம்பு கந்தையா எல்லோருக்கும் நன்றி தெரிவித்துப்பேசினார்.

பொலிசாருக்கு இந்நிகழ்ச்சி நடந்தால் சச்சரவு ஏற்படும் என்று பொய்த் தகவல் கொடுத்த இந்த நிகழ்ச்சி நடைபெறுது தடுத்துவிட துரோகப்பர்கள் எடுத்த முயற்சியாவும் மக்கள் கொடுத்த ஆதரவால் முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணங்களை விளக்கி தமிழர் கூட்டணி விரிவான அறிக்கையொன்றை வெளியிடும்.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு, ஹர்த்தால் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான அறிக்கைகளையும் துண்டுப்பிரசுரங்களையும் பரிசீலித்து வெளியிடுவதற்கு திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், தா. சங்கரப்பிள்ளை, நேசையா, சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரைக்கொண்ட குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

ஹர்த்தால் நடவடிக்கையின்போது வர்த்தக நிலையங்களையும், தொழில் நிறுவனங்களையும் யாராவது திறந்து வைத்திருந்தால், அவர்களை தமிழினத்தின் துரோகிகளாக கருதி எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களைப் பகிஷ்கரிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பிரதமர் எதிர்வரும் ஆகஸ்டில் யாழ்ப்பாணம் செல்லவிருப்பது தெரிந்ததே.

## மன்னார் தொகுதியில் தமிழரசுக் கிளைகள் ஆரம்பம்!

கடந்த 22, 23-6-74 திகதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டமும், தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டமும் மன்னாரில் திரு செ. யேரன்மார்க் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன் பொருட்டு மன்னாருக்கு வருகை தந்த கட்சியினதும், கூட்டணியினதும் பிரமுகர்களுக்கு மன்னாரின் பல்வேறு பகுதிகளிலும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விடத்தல்தீவு, அடம்பன், வங்காலை தலைமன்னார் ஸ்டேசனடி, தலைமன்னார், பேசாலை தாழ்வுப்பாடு, ஆகிய இடங்களில் தமிழரசுக்கட்சியின் கிளைகள் திறக்கப்பட்டன.

ஆங்காங்கே கட்சிக் கிளைத் திறப்பு விழாக்களும் கருத்தரங்குகளும் நடைபெற்றன அவற்றில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு தமது உணர்ச்சிப்பெருக்கை எடுத்துக் காட்டினர்.

தாழ்வுப்பாடு, விடத்தல் தீவு, அடம்பன், வங்காலை, தலைமன்னார், பேசாலை ஆகிய இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துடன், பொதுச் செயலாளர் திரு. கி. கதிரவேற்பிள்ளை. கே. ஜெயக்கொடி, பா. நேமிநாதன், வி. தர்மலிங்கம், கே. துரைரத்திலம்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழில் எழுந்த...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்புக்கொண்டுள்ளார். (1) புதிய தமிழ் சொற்களை ஆக்கல் (2) பழந்தமிழ் நூற்களில் இருந்து பொருத்தமான சொற்களை பொறுக்கியெடுத்தல் (3) சர்வதேச மொழிகளில் இருந்து தமிழுக்கு பொருத்தமான ஒலியுள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை தமிழ்ப் படுத்தல். இம் மூன்று முறைகளைக் கையாண்டு, கலைச்சொற்களை உருவாக்குவதையே தமிழ் அறிஞர் உலகம் வரவேற்கிறது.'

திரு. ஈழவேந்தனின் இக் கருத்தே, கருத்தரங்கில் கூடியிருந்த பெரும்பான்மையோரது ஆதரவைப் பெற்றது என்பதை இங்கு குறிப்பிடுவது எனது கடமையாகும்.

"தமிழிற் சட்ட மொழிபெயர்ப்பிலுள்ள சிக்கல்கள்' எனும் தலைப்பில் திரு. கு. செல்வச்சந்திரன் படித்த கட்டுரையையொட்டி கருத்துரைத்த திரு. கரிகாலன் ஒரு தெளிவான உண்மையை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"மொழி பெயர்ப்பு" என்பது ஏதோ நிரந்தரமானது என்றும், தமிழர்கள் எந்நாளும் மொழிபெயர்ப்புக்களையே நம்பி வாழவேண்டியவர்கள் என்றும் நாம் ஏன் எண்ண வேண்டும்? மொழிபெயர்ப்பிலேயே என்றென்றும் தமிழர்கள் சாசுவதமாக தங்கியிருக்க வேண்டுமா? தமிழிலேயே மூல நூல்கள் —அவை சட்ட நூற்கள் என்றாலும் ஏனைய அறிவியல் நூற்கள் என்றாலும் — உருவாகும் காலம் விரைவில் ஏன் வரக் கூடாது?

இவ்வாறு கேட்டார் திரு. கரிகாலன். ஆமாம் — இன்றைக்கு முடியிழந்து, கொடியிழந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழன், நாளை துடித்தெழுந்து போராடி தனக்கென ஒரு சொந்த நாட்டை உருவாக்கி விட்டால், அப்புறம் — புத்தம் புதிய தமிழ் நூல்கள் தமிழிலேயே ஏன் உருவாக்க முடியாது?

— வளரும்.

## 83 வீதமும் என்ன ஆச்சு?

யாழ்ப்பாணம் மாநகர சபை தனது வருமானத்தில் இரண்டு வீதத்தைக் கூட அபிவிருத்தி வேலைகளுக்கு பயன் படுத்தவில்லையென்று தான் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, மேற்படி மாநகர சபை தனது வரவு செலவுத் திட்டத்தை மாற்றி 17வீதத்தை அபிவிருத்திக்காக செலவு செய்ய முடிவு செய்துள்ளதாக அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா யாழ்ப்பாணத்தில் கூறியிருக்கிறார்.

மெத்தச் சரி — மீதி 83 வீத வருமானத்தினதும் நிலையென்ன? அது யாருடைய அபிவிருத்திக்காக செலவிடப்படுகிறது என்று கேட்கிறார்கள் யாழ்ப்பாணத்து வரியிறுப்பாளர்கள்.

## ● சிவகுமாரன் நினைவாக பாடசாலைகள் பகிஷ்கரிப்பு!

மாவீரன் சிவகுமாரன் மறைந்து 31வது தினம் பூர்த்தியான அந்திரேட்டி கிரியை நாளன்று, யாழகத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளையும், கல்லூரிகளையும் மாணவ மாணவியர் பகிஷ்கரித்து, சிவகுமாரன் மீது தாங்கள் வைத்திருக்கும் அபரிமிதமான அன்பையும் வாஞ்சையையும் எடுத்துக்காட்டினர்.

# பரீட்சை எழுதவேண்டிய நேரத்திலே பாடையிலே சென்றுயே!

## சிவகுமாரனின் சக மாணவி ஒருவரின் கண்ணீர்க் கடிதம்!

சோதரா! சிவகுமாரா! நீ தொழில் நுட்பக் கல்லூரியில் படிக்கும் போது பெயரளவில் கேள்விப்பட்டிருக்கின்றேன்; பேசியதில்லை பின்பு மீனுட்சி வர்த்தகக் கல்லூரியில் படிக்கும்போது தான் உன்னை நன்குதெரிந்து கொண்டேன்: அதன் பின்புதான் உன்னை நன்ருக புரிந்து கொண்டேன். உனது அன்பு உள்ளமும் ஆழமான அறிவும், தீவிர மான போக்கும், தமிழ் மொழியில் உள்ள திராத பற்றுதலும் எம்மால் மறக்க முடியுமா? தமிழன் தமிழனுக வாழவேண்டும் என்று அடிக்கடி கூறுவாயே! தமிழனின் ஆங்கில மோகத்தை எள்ளி நகையாடுவாயோ தமிழர் என்ற போர்வையில் அவர்களின் அநாகரிகமான போக்கினைக் கண்டிப்பாயே! மேல்நாட்டு உடைகளை, பழக்க வழக்கங்களை முற்ருக வெறுப்பாயே! எமது தாய் மொழி தமிழ்! அது எமது பிறப்புரிமை! அதைக்காக்க கடைசி இரத்தத்துளி இருக்கும் வரை போராடியே மடிவான் தமிழன் என்று அடிக்கடி கூறுவாயே! தமிழன் தன்மானமுடையவன்! அவன் என்றும் அடிமையாக வாழ்ந்ததும் இல்லை. இனியும் அடிமையாக வாழப்போவதில்லை என்று வீரமுழக்கம் கொட்டுவாயே! விடுதலை வேட்கை கொண்டு படாதபாடுபட்டாய் இன்று விடுதலை பெற முன்னரே எட்டப்பர் சிலரினுல் காட்டிக்கொடுக்கப் பட்டாயே! உனது உடல் இவ்வுலகை விட்டுப்பிரிந்தது என்னவோ உண்மைதான் ஆனல் உனது ஆவி எம்மை விட்டுப் பிரியவில்லை: எமது விடுதலைப்போருக்கு உனது மறைமுகமான உதவி இருக்கும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை இருக்கிறது:

உடல் பொருள், ஆவி அத்தனையும் தமிழினத்திற்காக அர்ப்பணித்தாயே! உன்னை மறந்து உரிமைக்காக போராடினுய். கண்துஞ்சாது கருமமே கண்ணுக இருந்து தமிழாராய்ச்சி மகாநாட்டின் போதுசெய்த சேவையை மறக்கமுடியுமா? பள்ளிப்படிப்பிலும் தொழில் நுட்பக் கல்லூரியிலும் நீ செய்த சேவைதான் போற்றுதற்குரியது. பாடசாலைக்கு ஒழுங்காக சமூகம் தரமுடியாமல் போனுலும் பரீட்சைகளுக்கு சமூகம் அளிக்காமல் இருக்கமாட்டாய். பரீட்சையிலும் கூடிய புள்ளிகளை பெறுவாய்; என்ன உன் திறமை என்ன உன் விந்தை. உன் மீது சந்தேகம் கொண்ட பொலிசார் உன்னை தடுப்புக் காவலில் வைத்திருந்த போதும் உன் படிப்பை முறியடிக்க முடியவில்லையே? அப்போதும் கூட நீ முதல் தர மாணவனுக சித்தியடைந்தமைதான் எமக்கு வியப்பு. மீனுட்சி வர்த்தகக் கல்லூரியில் எம்முடன் கணக்காளர் (இலண்டன்) 1ம் 3ம் பகுதி படித்து அதிலும் சித்தி எய்தினுய் தொடர்ந்து மூன்ரும் பகுதி படித்திருந்தால் ஜுன் 7ம் திகதி கொழும்பில் சோதனை எழுதியிருப்பாய். ஆனுல் அன்றுதான் நீ அடக்கம் செய்யப்பட்டு விட்டாயே.

பாடசாலையில் நீ செய்த செயல் மெச்சக் கூடியது. பெண்களை சகோதரியாகவும் தாயாகவும் மதிக்கும் பண்பு உன்னில் கண்டு கொண்டேன். வகுப்பில் மாணவ மாணவிகளுடன் தூய தமிழில் பேசுவாய். தவறுதலாக கூட ஆங்கில வார்த்தையை உபயோகிக்க மாட்டாய் அப்படி தவறுதலாக கூட எம்மில் சிலர் ஆங்கில வார்த்தையை உபயோகித்தால். சகோதரிகளே! எமது தாய்மொழி தமிழ், அதனை ஏன் அந்நிய மொழியில் தவழ விடுகிறீர்கள்— தமிழன் என்று சொல்லிக் கொள்ள பெருமைப்பட வேண்டிய நாம் அந்நிய மொழியை வளர்த்தால் எப்படி? எமது இனிய தமிழ் மொழியை விட்டுக்கொடுக்காதீர்கள். அதனை தாலாட்டி சீராட்டி வளர்க்க வேண்டிய தாய்க்குலமாகிய நீங்களே இப்படிச்செய்யலாமா? என்று கூறி எம்மை நாணவைப்பாயே. இனி அப்படிச் சொல்ல யார் உள்ளார்கள்?

—செல்வி. ராஜினி ராஜரட்ணம்
வவுனியா.

●

ஈழம் வாழ் இலட்சோப இலட்சம் மக்களின் உள்ளங்களைத் தீராத துன்பத்தில் வாழ்த்திவிட்டுச் சென்று விட்டார் எங்கள் தியாகச் செம்மல் சிவகுமார்: எத்தனையோ தலைவர்களால் அடையமுடியாதவீர சுவர்க்கத்தை அடைந்து விட்டார். எங்கள் திரவியம்; ஈழத்தின் விலைமதிக்கமுடியாதமாணிக்கம், உணர்ச்சியின் பிறப்பிடம், ஆளும் இனம் நாமே மொழிய ஆளப்படும் இனம் நாமல்ல என மார்பு தட்டும் மறத்தமிழன், தியாகச்சுடர் இத்தனையும் இழந்து விட்டனர் இலங்கை வாழ் தமிழ் மக்கள் இது ஈழ மக்களால் அடைக்க முடியாத ஒரு நட்டமாகும்.

நூற்றாண்டு காலம் ஊர் பெயர் தெரியாது வாழ்வதை விட ஒரு மணி நேரம் வானிலே பிரகாசித்து வீழ்வது மேலென எண்ணிய தீவிரவாதி எங்கள் திரவியம் இளம் சிங்கம் இறந்து விட்டது. மனிதாபிமானம்சிறிது மற்ற சிங்கள ஏகாதிபத்தியத்திற்குத் தலை வணங்காத் தமிழன் தற்கொலை செய்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான். ஆம் தமிழர் படும் அல்லல்களைத் தமிழ்த் தாயிடம் தனியே சென்று கூறி விடை காணத் தயங்காது துணிந்து புறப்பட்டு விட்டான் இத்தியாகி;

இவரது மனத்துணிவோடு, திடமான நம்பிக்கை கொண்ட உள்ளத்தோடு ஒவ்வொரு தமிழ் மகனும் அறப்போரில் ஈடுபட முன் வருவானுயின் வெகு விரைவில் தமிழ் ஈழம் காண்போம்;

—உவிடுலூர் பாலரவீந்திரன்.

●

பஞ்சிலே பற்றிய தீ வெனப்பறந்ததுசெய்தி. துஞ்சியே வீழ்ந்தன பல்வாயிரம் இதயங்கள். விம்மியேபொருமின நல்லோர் இதயங்கள். ஆலய மணி சேவி ஒலித்தது; காட்டாறெனப் பெருகிற்று மக்கள் கூட்டம். இதற்கெல்லாம் அர்த்தம் உண்டு. ஆம் ஒவ்வொரு அசைவுக்குமே விளக்கம் உண்டு. 'சிவா அண்ணு' மறைந்துவிட்டார். தமிழன்னையின் தவப்புதல்வன் மண்ணோடு மண்ணுகக் கலந்து விட்டார்; ஆனுல், அண்ணு எல்லோருடைய இதயங்களிலும் ஒளி விளக்காய் ஈழத்தின் மணிவிளக்காய், வழிகாட்டியாக, இதயத்தில் ஒளிரும் மாணிக்க தீபமாக விளங்குகின்ருர். எம் தாய்நாட்டை அடிமை, மிடிமை நிலையிருந்து விடுவிக்கும் வாழ்விக்கும் மணி மகுடமாக எல்லோருக்கும் புத்துயிர் ஊட்டுகின்ருர். ''தமிழராகப் பிறந்த நாம் எல்லோரும் தமிழுக்காகப் போராடி உரிமை பெற வேண்டும். அன்றேல் உயிரை விட வேண்டும்' இதற்கு விளக்கம்தான் அண்ணுவின் மரணம்.

ம. அகிலேஸ்வரி, பரந்தன்;

●

''செய்து முடி இல்லையேல் செத்து மடி'' என்பதை தாரகமந்திரமாகக்கொண்டு வாழ்ந்து காட்டியவன் தான் தியாகி சிவகுமாரன் அவனது ஒரே ஒரு இலட்சியம்—தமிழினம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தனக்கென்று ஓர் தனி அரசை அமைத்து தமிழ் மொழியை அரியணையில் ஏற்றுவதுதான். சங்கம் வளர்த்த தமிழை மூவேந்தரால் போற்றப்பட்ட தமிழை எவனொருவன் ஏந்திக்காத்த தமிழை ஓர் சின்னஞ்சிறிய சிலந்திப்பூச்சி அழிக்க முற்படுவதை காணச் சகிக்காமல் அதை எதிர்த்துப்போரிட்டான் அதன்பயன் தமிழுக்கு தனது உயிரைக்கொடுத்து தமிழ் மண்ணுக்கு தன் உடலைக்கொடுத்து தமிழர் நெஞ்சினில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டான்!

குப்பிழான், சி. ஜோதி.

# பொறுத்தருள்வீர்!

தமிழ் ஈழத்தின் விடுதலை வீரன் சிவகுமாரனின் உயிர்த்தியாகம் தமிழ் மக்களிடையே என்றுமேயில்லாத பேரெழுச்சியையும் உத்வேகத்தையும் விடுதலை ஆவேசத்தையும் ஏற்படுத்தியுள்ள தென்பதை சிவகுமாரனுக்கு அஞ்சலி தெரிவித்து நாள் தோறும் நமக்கு வந்து குவியும் நூற்றுக்கணக்கான கவிதைகளும் கட்டுரைகளும் எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றன. தங்கள் உணர்ச்சியை எழுத்தில் வடித்து ஏராளமானேர் எழுதிய வண்ணம் இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுடைய உணர்ச்சியையும் உத்வேகத்தையும் நாம் பாராட்டும் அதே சமயம், அனைத்தையும் சுதந்திரனில் பிரசுரித்து அவர்களை உற்சாகப் படுத்த நாம் விரும்பினுலும்—இடத்தட்டுப்பாடு காரணமாக அதை நிறைவேற்ற நம்மால் முடியவில்லை என்பதையும்வருத்தத்துடன் அறியத்தருகிருேம். அருமை வாசகர்கள் நம் நிலையை உணர்ந்து பொறுத்தருள்வார்களாக.

— ஆசிரியர்.

# சிவத் தமிழ்த்துரோகியின் ஈனச் செயல்! சிங்கப்பூர் தமிழ் பெரியாருக்கு அவமதிப்பு!

சிங்கப்பூர் குடியரசில் சைவத்திற்கும், தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிவரும் பெரியார் திரு. ம. அம்பலவாணர் தமது துணைவியார் சகிதம் இங்கு வருகை தந்திருந்தாரல்லவா? தமிழ் ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இப் பெரியார், சிங்கப்பூர் நாட்டில் ஆற்றிவரும் பணிகளுக்காக, அன்னாரைக் கௌரவிக்கும் பொருட்டு, ஒரு தேநீர் விருந்தும், பொது வரவேற்பு உபசாரமும் அளிக்க இங்குள்ள இந்து மத நிறுவனங்கள் பல சேர்ந்து ஒழுங்குகள் செய்திருந்தன: நிகழ்ச்சிகள் சென்ற 21-ம் திகதி வெள்ளிக்கிழமை வம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஏற்பாடாகி இருந்தன.

எட்டப்ப எஜமானர்களுக்கு ''காக்கா'' பிடித்து, அவர்களுக்கு பாதபூசை செய்யும் சிவத்தமிழ் துரோகி ஒருவர் இந்த ஏற்பாடுகளை அறிந்ததும், பாராட்டு விழா பேச்சாளர் பட்டியலில் தனது பெயர் இடம் பெறவில்லை என்ற காரணத்தால் இந்நிகழ்ச்சிகளைக் கெடுக்கும் சதிச்செயலில் இரவுபகலாக ஈடுபட்டிருந்தாராம். வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் தங்கியிருந்த சிங்கைத் தமிழ் பிரமுகரை ''மேற்படி உபசாரங்களில் கலந்து கொண்டால், மீண்டும் சிங்கப்பூர் திரும்ப மாட்டீர்கள். நிகழ்ச்சி அமைப்பாளர்கள், தமிழ் அரசியலுக்கு இலாபம் தேடவே இதனை ஒழுங்கு செய்திருக்கள்; அவர்களின் வலையில் சிக்கினுல் ஆபத்து நேரிடும் என தொலைபேசி மூலம் அடிக்கடி மிரட்டினுராம். தனது சக துரோகிகளையும் இம் மிரட்டல் வேலைகளில் ஈடுபட வைத்தாராம். இச்சிவத்தமிழ் துரோகியின் எடுபிடியும், துரோக வேலைகளில் கைதேர்ந்தவருமான வடபகுதி ''சண்டியன்'' எம். பீ. இக் கழுத்தறுப்பு நாடகத்திற்கு பூரண ஆசீர்வாதமும் ஒத்துழைப்பும் நல்கினுராம்.

இந்த சனச்செயல்களினுல் மதிப்புக்குரிய சிவநெறிப்பெரியாருக்கு அளிக்கப்படவிருந்த உபசார நிகழ்ச்சிகள் திடீரென ரத்துச்செய்தனர் ஏற்பாட்டாளர். நிகழ்ச்சி அறிவித்தல்களை புதினப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்த பொது மக்கள் பலர், சரஸ்வதி மண்டபத்திற்கு சென்று பெருத்த ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டியதாயிற்று. விஷயம் அறிந்ததும், சிவத்தமிழ் துரோகியையும், எட்டப்ப எம். பி. யையும் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனராம்.

வேறும் பல சம்பவங்களையும் இக்கழுத்தறுப்பு நாடகத்தையும் அவதானித்த சிங்கப்பூர் பெரியார் 'ஈழத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களுக்கு, தமிழ் மக்களிடையே உள்ள எட்டப்பர்களே காரணம். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு, சதி செய்தவர்களும் இந்தத் துரோகிகளே! தமிழ் மக்களின் துயருக்கான காரணத்தை இந்த விஜயத்தினுல் புரிந்து கொண்டேன். 'அடக்கடவுளே! என்றுதான் நம் மினம் தலைநிமிர்ந்து வாழப் போகின்றதோ!' என கண்களில் நீர் மல்க நாத்தழுதழுக்க தமது மதிப்புக்குரிய இலங்கை நண்பர்களிடம் கூறினுராம்: மேலும் ஒரு மாத காலத்திற்கு இங்கு தங்கிச் செல்லத் திட்டமிட்டிருந்த இப் பெரியார், ''துரோகிகள் மத்தியில் என்னுல் இனி தொடர்ந்தும் இருக்க முடியாது'' எனக் கூறி சிங்கப்பூர் திரும்பினுராம்.

மேற்படி சிவத்துரோகி பலப்பல மன்றங்களிலும், வேண்டாவிருந்தினருகப் புகுந்து குறிப்பிட்ட சிலருக்கு 'காக்கா' பிடிக்கும் பணியும் கழுத்தறுப்பு நாடகங்களும் நடாத்தி வந்தவர் அம்பலத்திற்கு வந்துள்ளதால், இப்பொழுது அம்மன்றங்களில் வாலறுந்த இருள் நரி போல், அங்கும் இங்கும் வெருண்டு அலைகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்துக்கு வருகை தந்திருந்த தமிழ்நாட்டு மடாதிபதி ஒருவர் இங்குள்ள சைவ அபிமானிகள் சிலருக்கு பட்டங்கள் அளிப்பதை அறிந்த இச் சிவத் தமிழ் துரோகி, தனக்கும் ஒரு பட்டம் கிடைக்காதா என ஆலாய்ப் பறந்ததும், பின்னர் கிடைக்காதென அறிந்ததும் ''பட்டம் தராவிடில், நாடு திரும்பும் பொழுது கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்துச் சங்கப் பகுதியைச் சேர்ந்த கண்டு அமத்துவேன்'' என மடாதிபதியை பயமுறுத்தியதும் உலகப் பிரசித்தம்.

பட்டம், பதவிகளுக்காக தமது இனத்தைக் காட்டிக் கொடுக்கவும் விற்கவும் அழிக்கவும் இத்தகைய ஈனப் பிறவிகள் நம்மிடையே இருக்கும் வரை நமக்கு விடிவே கிடையாது. என்று தான் இந்நிலை மாறுமோ? காலம் தான் பதில் கூற வேண்டும்.

# மேற்கு நைஜீரியாவுக்கு ஏற்றுமதி

வெல்டிங் எலெக்ரோட்டுகள் மென்மையான ஆர்க் 2மி. மீ., மோட்டார்களுக்கான விண்ட்ஸ்கிறீன், ரான்சிஸ்டர் கசெற் ரேப் றெக்கோடர்கள், கார் கார்ட்றிச் பிளேயர்கள், பாஸ்பெக்ற் (PASPECT) 5 மி.மீ., அளவு 8'x4'-6'x4' விமானக் கடித அட்டைகள், எல்லாவகையினவுமான கட்டடப் பொருட்கள், பல்வேறு வகையான துணிமணிகள், 36" நீளமுள்ள கைட் பார்களில் (GUIDE BARS) பயன்படுத்தற்கான 063" படியளவும் (கேஜ்) 404" உயரமும் (பிச்) கொண்ட சோசெயின்கள், (SAWCHAINS), அலுவலக உபகரணங்கள், நீர்தெறிக்கும் குழாய்கள், வெஸ்பா டயர்கள், திரைக்கான வயர் கம்பிகள், 7/32" அளவு கொண்ட செயின்சோ பைல்கள், பெண்களுக்கும் ஆண்களுக்குமான சப்பாத்துகளும் சாண்டல்களும், சேட்டுகள், பெண்களின் கச்சைகள், காற்சட்டைகள், காற்பந்துகள், வெளியணிகள், உள்ளணிகள், எல்லா வகையினவான றெடிமேட் அணிகளும், சைசிக்கிள்களும் அவற்றின் பாகங்களும், தொப்பிகள், குல்லாய்கள் 3.029 மி. மீ. தடிப்புள்ள தட்டை கம்பிகள், வெல்டிங் யந்திரங்கள், வயர் கம்பிகளுக்கான கொழுக்கிகளும் வளையங்களும், எல்லா வகையான மின்சார சாதனங்கள், கைக்கடிகாரங்கள், கைவளைகள், சி60 & சி90 அளவுள்ள கசெற் (CASSET c60 & c90) மோட்டார் ஜாக்குகள், (ஒலிவ் எண்ணெய் உட்பட) எல்லாவித தகரத்திலடைக்கப்பட்ட உணவுகளும், மட்பாண்டங்கள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் முதலியன. —காப்புறுதி கப்பற் கட்டணம் உட்பட்ட விலைவிபரங்களும் மாதிரிகளும் அஞ்சல் அலுவலகம் மூலம் விமான பார்சல் அஞ்சலில் நேரே பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்:—

**MESSRS. TAOFIKI TAOKEED & SONS,**

**SW8/427B AYANKOYA STREET,**

**OKE-ADO IBADAN,**

**WESTERN NIGERIA.**

## இப்பொழுது காட்சியளிக்கிறது

மக்கள் திலகம் நடித்த மகத்தான குடும்பப்படம்

**சென்றல்** மருதானை **ராணி** யாழ் நகர்

தினசரி - 2, 6, 9-30 10.30, 2.30, 6.30, 9.30

பயங்கர சண்டைகள், அருமையான கதை காதுக்கினிய கீதங்கள் நிறைந்த படம்

எம். ஜி. ஆர், ஜெயலலிதா, முத்துராமன்
அசோகன், நம்பியார், சோ. பண்டரிபாய்
வி. கே. இராமசாமி நடித்த

# ஒரு தாய் மக்கள்

இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: பீ. நீலகண்டன்


## மன்னார்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் கூட்டணிப் பிரமுகர்கள், முன்னாள் செனட்டர் மாணிக்கம், திரு. ஞானமூர்த்தி, திரு: செ. யோன்மார்க் ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்,

இந்நிகழ்ச்சி ஒழுங்குகளை மாவட்ட கட்சி அமைப்பாளர் திரு. ஜோன் மார்க் அவர்கள் கவனித்தார்.

23-6-74ம் திகதி பிற்பகல் 4. மணியளவில் கட்சி கூட்டணிப் பிரமுகர்கள் மன்னாரை விட்டுப் புறப்படும்போது கட்சி ஆதரவாளர்களால் வழியனுப்பி வைக்கப்பட்டார்கள்.

## சிறையில்

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் இன்றுடன் இரண்டு ஆண்டு இருபத்தெட்டு நாட்கள்.


மில்க்வைற் நீலசோப்
நியூ மில்க்வைற் சோப்
மில்க்வைற் பார் சோப்
மில்க்வைற் சலவைப் பவுடர்
மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
மில்க்வைற் 30 சதம் சோப்
மில்க்வைற் 15 சதம் சோப்
வாங்கிப்பாவித்து அதிகலாபம் அடையுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.



## இப்பொழுது காட்சியளிக்கிறாள்

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) **வின்சர்** (யாழ் நகர்)

ஆகிய திரைகளில்

**ஜெய்சங்கர் ஜெயலலிதா**
எம்.என். ராஜம், புஷ்பலாத, சோ,
ரி.கே. பகவதி, பி.கே சரஸ்வதி

-நடித்த-

# வந்தாளே மகராசி



## 5வது வெற்றி வாரம் கெபிட்டி

- ஜெய்சங்கர்
- வாணிஸ்ரீ
- நாகேஷ்
- ரமாபிரபா
- வி கே. ராமசாமி

— நடித்த —

குடும்பச் சித்திரம்

# அவசரக் கல்யாணம்



## 11-வது வாரம்

கெப்பிட்டல் - ராஜ்
(கொழும்பு) (நீர்கொழும்பு)
வெலிங்டன் (யாழ் நகர்)
திரைகளில்

எம்.ஜி.ஆர்,ஜெயலலிதா,
என். எம். நம்பியார்,
எஸ். ஏ. அசோகன்,
நாகேஷ், மனோரமா,

—நடித்த—

# ராமன்தேடிய சீதை

(ஈஸ்மன் கலர்)



## 3வது வாரமாக காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)

ஜெய்சங்கர்,
கே. ஆர். விஜயா



சுந்தரராஜன், சோ, மனோரமா. நடித்த M. S. காசியின்

# வாயாடி


இப்பத்திரிகை அகோசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.